பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
30 08 2024 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- மகாராஷ்டிராவின் வத்வான் ஆழ்கடல் துறைமுகம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவுக்கான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் இரண்டாவது கருத்து கேட்புக் கூட்டம் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.
- இந்திய – சீன எல்லைப்பகுதியில் அமைதியையும், இணக்கமான சூழ்நிலையையும் உறுதி செய்ய இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.
- உலகின் ஆறு முன்னணி தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தொள்ளாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் முன்னிலையில் கையெழுத்தாகின.
- தாய்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்திரி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மகாராஷ்டிர மாநிலம் பால்கரில் அமையவுள்ள வத்வான் ஆழ்கடல் துறைமுகம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பை உறுதி செய்யும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் இன்று அடிக்கல் நாட்டப்படவுள்ள வத்வான் துறைமுகம் பற்றி சமூக வலைளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், நாட்டின் கடல்சார் வர்த்தகத்தில் வளர்ச்சிக்கு இது உதவிடும் என்று தெரிவித்துள்ளார்.

நாட்டின் மிகப்பெரிய ஆழ்கடல் துறைமுகமாக இது திகழும் என்று அவர் கூறியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலத்தின் வளர்ச்சிக்கு இது துணை புரியும் என்று திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

மும்பையில் தற்போது நடைபெற்று வரும் உலகளாவிய Fintech விழாவில் திரு நரேந்திரமோடி உரையாற்றி வருகிறார்.

அதைத்தொடர்ந்து Palghar-ல் உள்ள சிட்கோ மைதானத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், 76 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வாத்வான் துறைமுக திட்டத்திற்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

நாடுமுழுவதும் ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான 218 மீன்வளத் திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கவுள்ளார்.

இதனால் மீன்வளத்துறையில் ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்ட வேலையப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் 360 கோடி ரூபாய் செலவில் தேசிய கப்பல் தகவல் தொடர்பு மற்றும் ஆதரவு அமைப்பையும் பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

இத்திட்டத்தின் கீழ் 13 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள மீன்பிடி விசைப்படகுகளில் ஒரு லட்சம் டிரானஸ்பான்டர்கள் பொருத்தப்படும். இது மீனவர்கள் கடலில் இருக்கும் போது தகவல் தொடர்பை ஏற்படுத்த உதவிடும்.

மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதோடு, மீனவர்களின் பாதுகாப்பையும் இது உறுதி செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவுக்கான நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் இரண்டாவது கருத்து கேட்புக் கூட்டம் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

இந்திய இஸ்லாமியர்கள் சிவில் உரிமை அமைப்பு, மும்பை அகில இந்திய சன்னி ஜமீஆத்துல் உலமா அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற கூட்டுக்குழுவிடம் தங்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவிக்கின்றனர்.

மக்களவை உறுப்பினர் திரு ஜகதாம்பிகா பால், தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த கூட்டு நாடாளுமன்றக் குழுவில் 21 மக்களவை உறுப்பினர்களும், பத்து மாநிலங்களவை உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர்.

வக்ஃப் நிர்வாகத்திறனை மேம்படுத்துவதற்காகவும், வக்ஃப் வாரிய சொத்துக்களை திறம்பட நிர்வாகம் செய்வதற்கும் ஏதுவாக வக்ஃப் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவர இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இந்திய – சீன எல்லைப்பகுதியில் அமைதியையும், இணக்கமான சூழ்நிலையையும் உறுதி செய்ய இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

பெய்ஜிங்கில் நடைபெற்ற இந்திய – சீன எல்லைப்பகுதி விவகாரங்களுக்கான 31-வது கூட்டத்தில் எல்லைக்கோட்டுப் பகுதிக்கும் இரு நாடுகளும் மதிப்பளிக்க வேண்டுமென்று மீண்டும் .உறுதி செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கிழக்கு ஆசிய பகுதிகளுக்கான இணைச்செயலர் திரு கௌரங்காலால் தாஸ் தலைமையிலான இந்திய குழுவினர் பங்கேற்றனர்.

சீன தரப்பில் அந்நாட்டின் எல்லைப்பகுதிக்கான தலைமை இயக்குநர் திரு **Hong liang** தலைமையிலான குழு பங்கேற்றது.

இந்த கூட்டம் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இரு தரப்பிலும் வெளிப்படையாக கருத்துக்கள் முன் வைக்கப்பட்டதாகவும், எல்லைக்கோட்டுப் பகுதி தொடர்பான பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இஸ்லாமாபாத்தில் வரும் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் கூட்டத்தில் பங்கேற்க பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு பாகிஸ்தான் முறைப்படி அழைப்பு விடுத்துள்ளது.

இதனை தெரிவித்த பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் மும்தாஜ் ஜாரா இந்த அமைப்பைச் சேர்ந்த அனைத்து நாடுகளுக்கும் முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அக்டோபர் மாதம் 15, 16 தேதிகளில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இந்தியா, சீனா, ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், பாகிஸ்தான், ரஷ்யா, தஜகிஸ்தான், உஸ்பெக்கிஸ்தான் ஆகிய உறுப்பு நாடுகள் பங்கேற்க உள்ளதகாவும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

பள்ளிகளில் கற்றல் மொழி குறித்த ஆய்வுக்கூட்டம் மத்திய பள்ளிக் கல்வித்துறையின் செயலர் திரு சஞ்ஜய்குமார் தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மூத்த அதிகாரிகளும், கல்வித்துறை வல்லுநர்களும் கலந்து கொண்டனர்.

ஒன்றுக்கும் மேற்பட்ட மொழி அறிவை பள்ளிகளில் உறுதி செய்ய வேண்டுமென்று மத்திய கல்வி அமைச்சகம் சார்பில் வலியுறுத்தப்பட்டது.,

பல மொழிகளை கற்பதன் மூலம், மாணவர்கள் ஒப்பீடு செய்து கற்றுக் கொள்வதற்கான திறன் மேம்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மாநில மொழிகளிலும், குறிப்பாக தாய்மொழியிலும் பள்ளிக் கல்வியை உறுதி செய்ய வேண்டியது அவசியம் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

[]<<<>>>[]

உலகின் ஆறு முன்னணி தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தொள்ளாயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

நோக்கியா, **paypal,** ஈல்டு எஞ்ஜினியரிங் சிஸ்டம், மைக்ரோசிப் டெக்னாலஜி, **Infinx healthcare applied** மெட்டீரியல்ஸ் ஆகிய தொழில் நிறுவனங்கள் சென்னை, கோவை, மதுரை நகரங்களில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வகை செய்கிறது.

இதன்மூலம் நாலாயிரத்து 100 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று இன்று வெளியான மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

உலக சுகாதார அமைப்பு குரங்கு அம்மை நோய் பரவலை தடுக்க விடுத்துள்ள எச்சரிக்கையை அடுத்து தமிழகத்தில் உள்ள சர்வதேச விமான நிலையங்களில் உரிய மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னை, கோவை, மதுரை, திருச்சி ஆகிய விமான நிலையங்களில் குரங்கு அம்மை நோய்க்கான தனி வார்டு அமைக்கப்பட்டு மருத்துவக் குழுவினர் பணியமர்த்தப்பட்டுள்ளதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - மா சு ) -40--- செகண்ட்*

**[]<<<>>>[]**

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட கடலோர காவல்படையின் முதலாவது மாசு கட்டுப்பாட்டு கப்பலான **Samudra Pratap** கோவாவில் சேவையை தொடங்கியது.

பாதுகாப்பு இணையமைச்சர் திரு. சஞ்சய் சேத் இதனை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய திரு. சஞ்சய் சேத் நாட்டின் பாதுகாப்பு தேவைகளுக்காக கப்பல் கட்டுவதில் சுயசார்பு நாடாக மாறியுள்ளது என்று கூறினார்.

பிற நாடுகளுக்காக கப்பல்களை கட்ட தொடங்கியிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா சட்டமன்ற உறுப்பினர் திரு ராம்தாஸ் சோரன் புதிய அமைச்சராக இன்று பதவியேற்றார்.

ராஞ்சியில் அம்மாநில ஆளுநர் திரு சந்தோஷ்குமார் கங்குவார் அவருக்கு பதவிப்பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ஹேமந்த்சோரன் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

திரு ஹேமந்த் சோரன் அமைச்சரவையிலிருந்து, திரு சம்பை சோரன் ராஜிநாமா செய்ததை அடுத்து, புதிய அமைச்சராக திரு ராம்தாஸ் சோரன் சேர்க்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலம் ஜேவரில் அமையவுள்ள நொய்டா சர்வதேச விமான நிலையம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் செயல்படத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த விமான நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், விமான சேவைக்கான உரிமங்கள் பெறுவது, சோதனை ஓட்டம் உள்ளிட்டவை இந்த ஆண்டு இறுதியில் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக ஒரு முனையமும், ஒரு ஓடு பாதையும், செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச விமான நிலையம் முழுமையாக பயன்பாட்டுக்கு வரும்போது ஆண்டுக்கு 12 மில்லியன் மக்கள் பயணம் மேற்கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

குஜராத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வந்த மழை குறைந்ததை அடுத்து, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மீட்புப் பணியில் ராணுவம், தேசிய பேரிடர் மீட்புப் படையினர், தீயணைப்பு துறையினர், ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

தாய்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்திரி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிதி ஆட்டத்தில் அவர் 6-4, 7-5 என்ற செட் கணக்கில் ஜப்பானின் நகோ சாட்டோ-வை வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாய் கார்த்திக் - தாய்லாந்தின் விசாயா இணை இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள துப்பாக்கிச் சுடுதல் மகளிர் பிரிவில் அவனி லேக்ரா, மோனா அகர்வால் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

பேட்மிண்டன், வில்வித்தை, டேபிள் டென்னிஸ், தடகளம், சைக்கிளிங் உள்ளிட்ட போட்டிகளிலும் இந்திய வீரர்கள் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**